மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் புரட்டாசித் திங்கள் 07 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 242/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 42/2022**

T.மாசிலாமணி .... மனுதாரர்/2 ம் பிரதிவாதி

**// எதிர்//**

தேவேந்திரன் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.R.R.சிவசுப்ரமணியன், B.Sc., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்/ பிரதிவாதி பெயரில் கடந்த 17.03.2023 ம் தேதியன்று ஏற்பட்டிருக்கும் ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து கொண்டு அசல் வழக்கு நடவடிக்கையினை மேல் நடத்த உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவார். மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 17.03.2023ம் தேதியன்று எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தேதிக்கு முன்பாகவே மனுதாரருக்கு மஞ்சள் காமலை நோய் ஏற்பட்டு மேல் சிகிச்சைக்காக மனுதாரர் கேரளாவில் NATUROPATHY சிகிச்சை பெற்று வந்ததால் அன்றைய தேதியில் வழக்கறிஞரை நேரில் சந்தித்து மனுதாரர் தரப்பு சான்றாவணங்களை கொடுக்க முடியாமலும், நீதிமன்றத்தில் ஆஜராக முடியாமலும் போய்விட்டது. இதனால் அன்றைய தேதியில் மனுதாரருக்கு எதிராக மேற்படி வழக்கில் எதிர்வரியில்லா உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை. மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை ஏற்று அசல் வழக்கை மேல் நடத்த அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது. எனவே மனுதாரருக்கு எதிராக கடந்த 17.03.2023ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) **எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் :-**

மனுதாரரால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் உண்மை நிலவரப்படிக்கும், நிலைநிற்க கூடியதல்ல. ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் இந்த மனுவினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள விபரங்களை நிரூபணம் செய்ய யாதொரு ஆவணங்களும் தாக்கல் செய்யாமல்

இந்த மனுவினை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

மேற்படி மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் இருந்து சிகிச்சை மேற்கொண்டதற்கான எந்த ஒரு ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் பொய்யான விவரங்களை கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. வேண்டுமென்றே வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் செயல்பட்டுவிட்டு மனு கொடுத்திருப்பது எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தையே காட்டுவதாக உள்ளது.

எதிர்மனுதாரருக்கு யாதொரு நீதியின் பலனும் கிடைத்துவிடக் கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. மனுதாரர் கரைபடிந்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ள காரணத்தினால் இந்த மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**தீர்வு** :-

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது இம்மனுவின் எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 17.03.2023 ம் தேதியன்று 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், அன்றைய தினம் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அன்றைய தினமே தோன்றாத்தரப்பினர்களாக முடிவு செய்து ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**4.** மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு கடந்த 17.03.2023 ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பின்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5.** மனுதாரர்/2 ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடுவதால், எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால், மனுதாரர் அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6) முடிவில்,** மனுதாரர்/2 ம் பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ கடந்த 27.09.2024 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 27.09.2024.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (23.09.2024) அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.23 18:34:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி .

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.23 18:34:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி .